அனுப்புநர்

சா.சேதுராம வர்மா
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி
அலுவலர்கள்

ந.க.எண். 026028 /D(3) /2022 நாள் : 20.02.2023

ஐயா / அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்புதவித் தொகைத் திட்டத் தேர்வு (NMMS) பிப்ரவரி 2023 –அறிவுரைகள் – தொடர்பாக.

பார்வை : இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம், நாள்.10.02.2023.

– – – –

25.02.2023 (சனிக்கிழமை) அன்று நடைபெறவுள்ள தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்புதவித் தொகைத் திட்டத் தேர்விற்கான தேர்வு மையங்களின் பட்டியல் (இணைப்புப் பள்ளிகளுடன்) பார்வையில் காணும் கடிதம் மூலமாக தங்களுக்கு அனுப்பப்பட்டது.

மேற்காண் தேர்வு நடத்துவது குறித்து கீழ்க்குறிப்பிட்டுள்ள அறிவுரைகளை அனைத்து தேர்வுமைய முதன்மைக் கண்காணிப்பாளர்களும் தவறாமல் கடைபிடிக்க உரிய அறிவுரைகளை வழங்கிடுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்புதவித் தொகைத் திட்டத் தேர்வு **(NMMS)** கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு நடைபெறும்.

| நாள் | பாடம் | நேரம் |
|---|---|---|
| 25.02.2023 (சனிக்கிழமை) | பகுதி I – MAT - Paper I மனத்திறன் தேர்வு, (Mental Ability Test ) | காலை மணி **9.30** முதல் 11.00 வரை |
| | Break Time 11.00 am to 11.30 am | |
| | பகுதி II SAT - Paper II படிப்பறிவுத் தேர்வு (Scholastic Aptitude Test) | காலை மணி **11.30** முதல் பிற்பகல் 1.00 வரை |

<u>குறிப்பு</u>:**காலை 11.00 மணி முதல் 11.30 மணி வரை** உள்ள இடைவேளை நேரத்தில் (Break time) தண்ணீர் குடிக்க, சிற்றுண்டி (Snacks) சாப்பிட மற்றும் கழிப்பறை செல்ல மட்டும் தேர்வர்களை அனுமதிக்குமாறு அறிவுறுத்த வேண்டும். தேர்வு முடியும் வரை எக்காரணம் கொண்டும் தேர்வர்களைத் தேர்வு மையத்தினை விட்டு வெளியே செல்ல அனுமதிக்கக் கூடாது.

2. **தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள் அவர்கள் பணியாற்றவுள்ள தேர்வு மையத்திற்கான பெயர்ப்பட்டியல் (Nominal Roll), தேவையான வினாத்தாட்கள் மற்றும் OMR வெற்று விடைத்தாட்கள் பெறப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.**

3. ஒவ்வொரு தேர்வு அறைக்கும் **20** மாணவர்கள் மட்டுமே தேர்வு எழுத ஏற்பாடு செய்ய வேண்டும். ஒவ்வொரு தேர்வு அறைக்கும் **20** வினாத்தாட்கள் மற்றும் **OMR** விடைத்தாட்கள் மட்டுமே வழங்கப்படும். எனவே, எக்காரணம் கொண்டும் **20** மாணவர்களுக்கு மேல் ஒரு தேர்வறையில் அமர அனுமதிக்கக்கூடாது.

4. **<u>OMR விடைத்தாள் பகுதி1 (MAT) மற்றும் பகுதி 2 (SAT) ஆகிய இரண்டு தேர்விற்கும் சேர்த்து ஒரு தேர்வருக்கு ஒரு விடைத்தாள் (OMR Sheet) பதிவெண்ணின் படி வழங்கப்பட வேண்டும். மாணவர்களுக்கு வழங்கப்பட்ட OMR விடைத்தாள் அவர்களுடைய பதிவெண்ணிற்குரியவைதானா என்பதை உறுதி செய்து கொண்டு மாணவர் மற்றும் அறை கண்காணிப்பாளர் கையொப்பமிட வேண்டும்.</u>**

5. **25.02.2023 அன்று நடைபெறவுள்ள (NMMS) தேர்விற்குரிய MAT & SAT ஆகிய இரண்டு வினாத்தாள் கட்டுகளும் தேர்வு மையத்தில் காலை 8.15 மணிக்குள் சென்றடையும் வண்ணம் வினாத்தாள் கட்டுக்காப்பு மையத்திலிருந்து வழித்தட அலுவலர்கள் பெற்று சம்பந்தப்பட்ட தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளரிடம் / துறை அலுவலர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.**

6. வினாத்தாளைப் பொறுத்த வரை பகுதி I மனத்திறன் (Mental Ability Test) தேர்விற்கான வினாத்தாட்கள் தேர்வு துவங்குவதற்கு கால் மணி நேரம் முன்னதாக அதாவது காலை **9.15** மணிக்கும், பகுதி II படிப்பறிவுத் தேர்விற்கான (Scholastic Aptitude Test) வினாத்தாள் முற்பகல் **11.15** மணிக்கும் பிரிக்கப்பட்டு முறையே காலை 9.30 / 11.30 மணிக்கு தேர்வர்களுக்கு விநியோகம் செய்ய வேண்டும். காலை மணி 9.30 முதல் பிற்பகல் **1.00** வரையிலான காலத்தில் தேர்வர்கள் எக்காரணம் கொண்டும் தேர்வு மையத்திலிருந்து வெளியில் செல்ல அனுமதிக்கக்கூடாது.

7. தேர்வுக்கூட அனுமதிச்சீட்டு (Admission Card) உள்ள தேர்வர்கள் மற்றும் பெயர் பட்டியலில் பெயர் உள்ள தேர்வர்களை மட்டும் தேர்விற்கு அனுமதிக்க வேண்டும். **புறச்சரக எண்ணில் (Out of Range Number) தேர்வெழுத கட்டாயமாக அனுமதி மறுக்கப்படுகிறது. புறச்சரகப் பதிவெண்ணில் தேர்வெழுத அனுமதிக்கப்பட்டால் அதற்கான தேர்வு முடிவுகள் வெளியிடும்போது எழும் பின்விளைவுகளை முதன்மைக் கல்வி அலுவலர்களே எதிர்கொள்ள வேண்டும்.** எனவே தேவையற்ற குழப்பங்களைத் தவிர்க்கும்பொருட்டு புறச்சரக எண்ணில் தேர்வெழுத அனுமதி வழங்க வேண்டாம்.

8. தேர்விற்கு வருகைபுரிந்த தேர்வர்களின் OMR விடைத்தாளில் present **P** என கருப்பு மையினால் நிழற்படுத்த வேண்டும். வருகைபுரியாத தேர்வர்களின் OMR விடைத்தாளில் **<u>Absent A என கருப்பு</u>** மையினால் நிழற்படுத்த வேண்டும்.

9. தேர்வுக்கூட அனுமதிச் சீட்டில் **புகைப்படம் மாறியிருந்தாலோ** அல்லது புகைப்படம் இல்லாமல் இருந்தாலோ, அதே நுழைவுச்சீட்டில் **உரிய தேர்வரின் புகைப்படம் ஒட்டி அதில் பள்ளித்தலைமையாசிரியர் சான்றொப்பமிட வேண்டும்.**

**10.** **தேர்வர்களுக்கு வழங்கப்படும் OMR Sheet லும் புகைப்படம் மாறி / இல்லாமல் இருந்தால், பெயர்ப்பட்டியலில் (Nominal Roll) மட்டுமே உரிய புகைப்படத்தினை பசையினால் ஒட்டி (நுழைவுச்சீட்டுடன் ஒப்பிட்டு) தேர்வர்களைத் தேர்வெழுத அனுமதிக்க வேண்டும். OMR விடைத்தாளில் தேர்வரின் புகைப்படம் ஒட்டக்கூடாது.**

**11.** **பெயர்ப்பட்டியலில் பெயர், தலைப்பெழுத்து, பிறந்த தேதி, இனம் (Classification) ஆகியவற்றில் திருத்தம் ஏதேனும் இருப்பின் உரிய திருத்தம் செய்து சான்றொப்பமிட்டு, பெயர்ப்பட்டியலின் இறுதியுள்ள Abstract-ஐ பூர்த்தி செய்து முதன்மைக் கண்காணிப்பாளரின் கையொப்பம் பெற்று OMR விடைத்தாட்களுடன் தேர்வு நாளன்றே ஒப்படைக்க வேண்டும்.**

**12.** OMR விடைத்தாளின் மேற்புறத்தில் | Attendance No. | **என்ற புதிய பகுதி இம்முறை சேர்க்கப்பட்டுள்ளது.**

**NMMS தேர்வு முடிவுற்ற பின்னர், அறைக்கண்காணிப்பாளர்களிடமிருந்து வருகை புரிந்த தேர்வர்களின் OMR விடைத்தாட்களை சேகரித்து வழக்கமான நடைமுறைகளைப் பின்பற்றி முதன்மைக் கண்காணிப்பாளர் ஆய்வு செய்து, அனைத்து OMR விடைத்தாட்களையும் (Used OMR) பதிவெண் ஏறுவரிசையில் (ascending order) அடுக்கிக் கொள்ள வேண்டும்.**

**பின்னர் OMR விடைத்தாளின் மேற்புறத்தில்** | Attendance No. | **என்ற கட்டத்திற்குள் முதல் OMR விடைத்தாளில் 001 எனத் துவங்கி, தொடர்ச்சியாக 002, 003, 004 . . . . . என கருப்பு மை பந்து முனை பேனாவினால் எழுதவேண்டும்.**

**உதாரணமாக, ஒரு தேர்வு மையத்தில் வருகை புரிந்தோரின் எண்ணிக்கை ( No. of Present Candidates) 232 எனில், கடைசி OMR தாளில் 232 என அதே எண்ணில் முடிவடைந்தால், அத்தேர்வு மையத்தில் NMMS தேர்வெழுதிய அனைத்து தேர்வர்களின் OMR விடைத்தாட்களும் பெற்றுக்கொள்ளப்பட்டது என பொருள்படும். அதன்பின்னரே, Packing செய்யப்பட வேண்டும்.**

**இந்நடைமுறை, எந்தவொரு வருகை புரிந்த தேர்வரின் OMR தாளும் அரசுத் தேர்வுகள் இயக்ககத்திற்கு அனுப்பப்படாமல் விடுபடவில்லை என்பதனை சம்பந்தப்பட்ட தேர்வு மையத்தின் முதன்மைக் கண்காணிப்பாளர் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அறிமுகப்படுத்தப்படுகிறது.**

**இந்த எண்ணிடும் நடைமுறை தேர்வு முடிவுற்ற பின்னரே முதன்மைக் கண்காணிப்பாளர்களால் மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.**

13. தேர்வு முடிந்தவுடன் வழித்தட அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தேர்வு மையங்களிலிருந்து விடைத்தாள் (OMR) / மீதமுள்ள வினாத்தாள் கட்டுக்களைப் பெற்று, முதன்மைக் கல்வி அலுவலரிடம் (வினாத்தாள் கட்டுக்காப்பு மையம்) ஒப்படைக்க வேண்டும். அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள், முதன்மைக் கல்வி அலுவலர்களுடன் இணைந்து அவ்விடைத்தாள் கட்டுகளை தங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள மைய வாரியப் பட்டியலுடன் ஒப்பிட்டு சரிபார்த்து கொள்ள வேண்டும். முதன்மைக் கல்வி அலுவலர்கள் **OMR** விடைத்தாள் கட்டுகளை **Logistics Lorry**- ல் அனுப்பும் வரை உரிய பாதுகாப்பு வசதியுடன் வைத்துக் கொள்ள வேண்டும்.

சென்னை, முதன்மைக் கல்வி அலுவலகத்தைத் தவிர்த்து, இதர முதன்மைக் கல்வி அலுவலர்கள் விடைத்தாட்கள் கட்டுக்களை இத்துடன் இணைத்தனுப்பப்படும் வழித்தடங்களில் பாதுகாப்பாக Logistics Lorry ல் அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதற்காக Logistics Lorry சேவை இவ்வியக்கத்தால் மேற்கொள்ளப்படும்.

நாகர்கோவில், விருதுநகர், நீலகிரி, தர்மபுரி, மற்றும் நாகப்பட்டினம் முதன்மை கல்வி அலுவலர்கள் விடைத்தாள் கட்டுக்களை **25.02.2023** அன்று Logistics Lorry மூலம் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலக பணியாளர் மற்றும் ஆயுதம் தாங்கிய காவலர் ஒருவருடன் **மாலை 4.00 மணிக்கு** கீழ்க்குறிப்பிட்டுள்ள வழித்தடங்களில் உள்ள முதன்மைக் கல்வி அலுவலர்களிடம் உள்ள மந்தணக் கட்டுகளைப் பெற்று பாதுகாப்பாக அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். **மேற்குறிப்பிட்ட மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் Logistics Lorry மூலம் OMR விடைத்தாட்களை தலைமை அலுவலத்தில் ஒப்படைக்கும் பொருட்டு ஆயுதம் தாங்கிய காவலர் ஒருவரை ஏற்பாடு செய்ய வேண்டும்.**

<u>வழித்தடம்</u>

| ROUTE I | ROUTE II | ROUTE III | ROUTE IV | ROUTE V |
|---|---|---|---|---|
| NAGERCOIL | VIRUDHUNAGAR | OOTY | DHARMAPURI | NAGAPATTINAM |
| TENKASI | MADURAI | COIMBATORE | KRISHNAGIRI | TIRUVARUR |
| TIRUNELVELI | THENI | TIRUPPUR | TIRUPATTUR | MAYILADUTHURAI |
| TUTICORIN | DINDIGUL | ERODE | TIRUVANNAMALAI | THANJAVUR |
| RAMANATHAPURAM | KARUR | NAMAKKAL | VELLORE | ARIYALUR |
| SIVAGANGAI | TRICHY | SALEM | RANIPET | CUDDALORE |
| PUDUKOTTAI | PERAMBALUR | KALLAKURICHY | KANCHIPURAM | VILLUPURAM |
| | CHENGALPATTU | | THIRUVALLUR | |

**சென்னை, முதன்மைக் கல்வி அலுவலர்** மட்டும் தேர்வு நாளான **25.02.2023** அன்று மதியம் **2.00** மணிக்குள் அரசுத் தேர்வுகள் இயக்குநர் அலுவலகத்தில் நேரடியாக துணை இயக்குநர் (பல்வகைத் தேர்வுகள்) அவர்களிடம் மந்தணக் கட்டுகளை ஒப்படைக்க வேண்டும்.

**ஒப்படைக்க வேண்டிய ஆவணங்களின் விவரம்**

| **அனுப்பப்பட வேண்டிய ஆவணங்களின் விவரம்** | **அமைய வேண்டிய கட்டுக்கள்** | **ஒப்படைக்க வேண்டிய அலுவலகம்** |
|---|---|---|
| 1.i) உபயோகிக்கப்பட்ட விடைத்தாட்கள் (Present Candidates – Used OMR Answer Sheets) **(PACKET – I)** | இம்மூன்று கட்டுகளையும் (Packet – I, II, III) ஒன்றன் மேல் ஒன்றாக வைத்து துணிப் பையினால் ஒரே கட்டாக கட்டி அரக்கு முத்திரையிட வேண்டும் . | வழித்தட அலுவலர் மூலம் சம்பந்தப்பட்ட முதன்மை கல்வி அலுவலர்அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். |
| 2. உபயோகிக்கப்படாத விடைத்தாட்கள் (Unused OMR Answer Sheets) **(PACKET – II)** | | |
| 3. திருத்தப்பட்ட பெயர் பட்டியல் (Corrected Nominal Roll) **(PACKET – III)** | | |
| 4. உபயோகிக்கப்படாத வினாத்தாள் புத்தகங்கள் (Unused Question Booklets) | தனிக்கட்டு | சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம் – **Unused Question Booklets** தான் உள்ளதா என்பதை அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் சரிபார்த்து பெற்றுக் கொள்ள வேண்டும். இந்தக் கட்டினை அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்களிலேயே வைத்துக் கொள்ள வேண்டும். |
| 5. பற்றொப்பச்சீட்டு (Aquitance) | படிவம் 2–ன்படி | சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம் |

ஒம்/–
**இயக்குநர்**

**இணைப்பு :** தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் அறைக் கண்காணிப்பாளர்களுக்கான முக்கிய அறிவுரைகள்

**நகல்:**

1. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் – உரிய நடவடிக்கைக்காக
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள். – உரிய நடவடிக்கைக்காக

## தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கு முக்கிய அறிவுரைகள்:

1. **25.02.2023** அன்று நடைபெறவுள்ள தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்புதவித் தொகைத் திட்டத் தேர்வு (NMMS) MAT & SAT ஆகிய இரண்டு வினாத்தாள் கட்டுக்களையும் தங்கள் வழித்தட அலுவலரிடமிருந்து காலை மணி **8.15 –**க்குள் பெற்று உரிய அலமாரியில் பாதுகாப்பாக வைக்க வேண்டும்.

2. கருப்பு மை பால்பாயின்ட் பேனாக்களை கையிருப்பில் வைத்திருக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.

3. தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்புதவித் தொகைத் திட்டத் தேர்விற்கு (NMMS) Bilingual முறையில் ஒரே வினாத்தாளில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அச்சிட்டு வழங்கப்படும்.

4. மாணவர்கள் ஒரே இடத்தில் குழுமுவதைத் தவிர்க்க தேர்வு மையத்தில் இரண்டு அல்லது மூன்று இடங்களில் Seating Plan ஐ அமைக்க வேண்டும்.

5. தேர்வுமைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள் தேர்வறைக் கண்காணிப்பாளர்களுக்கு தேர்வு நடத்துதல் குறித்த அறிவுரைகளை காலை **09.00** மணிக்கு வழங்க வேண்டும்.

6. தேர்வு அறைக் கண்காணிப்பாளர்களிடமிருந்து அலைபேசியினை பெற்று, தேர்வு முடிந்த பிறகே அதனை அவர்களுக்கு வழங்க வேண்டும்.

7. தேர்வறைக் கண்காணிப்பாளர்களை காலை மணி **9.10 –**க்கு தேர்வறைக்கு அனுப்ப வேண்டும்.

8. தேர்வர்களை காலை மணி **9.15–**க்கு தேர்வறைக்குள் அனுமதித்து, தேர்வுக்கூட நுழைவுச்சீட்டினை சரிபார்த்து உரிய இருக்கையில் அமர வைக்க அறைக் கண்காணிப்பாளர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

9. காலை மணி **9.15–**க்கு வினாத்தாள் கட்டு பிரிக்கப்பட்டு தேர்வறைக் கண்காணிப்பாளர்களுக்கு மணி **9.20–**க்குள் வழங்கப்பட வேண்டும்.

10. **25.02.2023** (சனிக்கிழமை) அன்று காலை மணி **9.30** முதல் 11.00 வரை பகுதி I – MAT - Paper I மனத்திறன் தேர்வும் (Mental Ability Test ), **முற்பகல் மணி 11.00 முதல் 11.30 வரை இடைவேளை நேரம் (**Break time)-ம் முற்பகல் மணி **11.30** முதல் பிற்பகல் 1.00 வரை பகுதி II SAT Paper II படிப்பறிவுத் தேர்வும் (Scholastic Aptitude Test) நடைபெறும்.

11. Mental Ability Test (Paper I) தேர்விற்கான வினாத்தாட்களை மணி **9.25 –**க்கு தேர்வறை கண்காணிப்பாளர்களால் பிரிக்கப்பட்டு மணி **9.30–**க்கு தேர்வர்களுக்கு வழங்க வேண்டும்.

12. Mental Ability Test (Paper I) மணி **11.00–**க்கு முடிந்தவுடன் OMR விடைத்தாட்களைத் தேர்வர்களிடமிருந்து பெற்று பாதுகாப்பாக வைத்து, Scholastic Attitude Test (Paper II) தேர்வு தொடங்குவதற்கு முன்னர் OMR விடைத்தாட்களை அதே தேர்வருக்கு வழங்க வேண்டும்.

13. **காலை மணி 11.00 முதல்  11.30 வரை** உள்ள இடைவேளை நேரத்தில் (Break time) தண்ணீர் குடிக்க, சிற்றுண்டி (Snacks)  சாப்பிட மற்றும்  கழிப்பறை செல்ல மட்டும் தேர்வர்களை அனுமதிக்குமாறு அறிவுறுத்த வேண்டும். தேர்வு முடியும் வரை எக்காரணம் கொண்டும் தேர்வர்களைத் தேர்வு மையத்தினை விட்டு வெளியே செல்ல அனுமதிக்கக் கூடாது.

14. தேர்வறைக் கண்காணிப்பாளர்களை **11.15** மணிக்கு தேர்வறைக்கு அனுப்ப வேண்டும்.

15. Scholastic Attitude Test (Paper II) தேர்விற்கான வினாத்தாட்களை **11.25** மணிக்கு தேர்வறை கண்காணிப்பாளர்களால் பிரிக்கப்பட்டு **11.30** மணிக்கு தேர்வர்களுக்கு வழங்க வேண்டும்.

16. தேர்வர்கள் தங்களுடன் தண்ணீர் பாட்டில் (Transparent Water Bottle only) எடுத்து வந்திருந்தால், அதனை தேர்வறைக்குள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.

17. கழிப்பறைகள் நன்றாக சுத்தம் செய்து கிருமி நாசனி தெளித்து சுத்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

18. **பெயர்ப்பட்டியலில் திருத்தத்தினையும் சரிவர மேற்கொள்ளப்பட வேண்டும். திருத்தம் அனைத்தும் சிவப்பு மையினால் மட்டுமே செய்யப்பட வேண்டும். மேலும் வருகை புரிந்த மாணவர்களின் எண்ணிக்கையும் பயன்படுத்தப்பட்ட OMR விடைத்தாட்களின் (Used OMR Sheets) எண்ணிகையும் சமமாக உள்ளதா என சரிபார்த்து அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

19. அறைக்  கண்காணிப்பாளர்கள் தேர்வர்களின் பதிவெண் மற்றும் பெயர் ஆகிய கலங்கள் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்துகொண்டு கையொப்பமிட வேண்டும் என்ற அறிவுரையை தவறாது பின்பற்றுமாறு தேர்வு அறைக் கண்காணிப்பாளர்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.

20. OMR விடைத்தாளின் மேற்புறத்தில் | Attendance No. | **என்ற புதிய பகுதி இம்முறை சேர்க்கப்பட்டுள்ளது.**

**NMMS தேர்வு முடிவுற்ற பின்னர், அறைக்கண்காணிப்பாளர்களிடமிருந்து வருகை புரிந்த தேர்வர்களின் OMR விடைத்தாட்களை சேகரித்து வழக்கமான நடைமுறைகளைப் பின்பற்றி முதன்மைக் கண்காணிப்பாளர் ஆய்வு செய்து, அனைத்து OMR விடைத்தாட்களையும் (Used OMR) பதிவெண் ஏறுவரிசையில் (ascending order) அடுக்கிக் கொள்ள வேண்டும்.**

**பின்னர் OMR** விடைத்தாளின் **மேற்புறத்தில்** | Attendance No. | **என்ற கட்டத்திற்குள் முதல் OMR** விடைத்தாளில் **001 எனத் துவங்கி, தொடர்ச்சியாக 002, 003, 004 . . . . . என** கருப்பு மை பந்து முனை பேனாவினால் **எழுதவேண்டும்.**

உதாரணமாக, ஒரு தேர்வு மையத்தில் வருகை புரிந்தோரின் எண்ணிக்கை ( No. of Present Candidates) 232 எனில், கடைசி OMR தாளில் 232 என அதே எண்ணில் முடிவடைந்தால், அத்தேர்வு மையத்தில் NMMS தேர்வெழுதிய அனைத்து தேர்வர்களின் OMR விடைத்தாட்களும் பெற்றுக்கொள்ளப்பட்டது என பொருள்படும். அதன்பின்னரே, packing செய்யப்பட வேண்டும்.

இந்நடைமுறை, எந்தவொரு வருகை புரிந்த தேர்வரின் OMR தாளும் அரசுத் தேர்வுகள் இயக்ககத்திற்கு அனுப்பப்படாமல் விடுபடவில்லை என்பதனை சம்பந்தப்பட்ட தேர்வு மையத்தின் முதன்மைக் கண்காணிப்பாளர் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அறிமுகப்படுத்தப்படுகிறது.

இந்த எண்ணிடும் நடைமுறை தேர்வு முடிவுற்ற பின்னரே முதன்மைக் கண்காணிப்பாளர்களால் மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.

21. தேர்வு முடிந்தவுடன் முதன்மைக் கண்காணிப்பாளர்கள் கீழ்க்குறிப்பிட்ட படிவத்தினை பூர்த்தி செய்து Packet – III உடன் இணைத்தனுப்ப வேண்டும்.

**Format - 1**

| Centre No.& Name | Total No. of Registered Candidates | Total No. of Present Candidates (used OMR) | Total No. of Absent Candidates (unused OMR) | Total No. of Blank OMR (unused OMR) |
|---|---|---|---|---|
| | | | | |

**Format - 2**

| Centre No.& Name | Total No. of Question papers received | Total No. of Question papers used (Present) | Total No. of balance Question papers |
|---|---|---|---|
| | | | |

**22.** தேர்விற்கு பணிபுரிந்த முதன்மைக் கண்காணிப்பாளர், துறை அலுவலர், அறைக் கண்காணிப்பாளர் மற்றும் அலுவலகப் பணியாளர்களின் உழைப்பூதிய பற்றொப்பச்சீட்டுகள் இணைப்பில் உள்ள படிவத்தில் பூர்த்தி செய்து அந்தந்த மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்களில் **25.02.2023** அன்றே ஒப்படைக்க வேண்டும்.

**23.** தேர்வு முடிந்தவுடன் சம்பந்தப்பட்ட வழித்தட அலுவலரிடம் கீழ்க்குறிப்பிட்டவாறு விடைத்தாள் கட்டுக்களை ஒப்படைக்க வேண்டும்.

## <u>தேர்வு மைய முதன்மை கண்காணிப்பாளர்கள் ஒப்படைக்க வேண்டிய ஆவணங்கள்</u>

| <u>அனுப்பப்பட வேண்டிய ஆவணங்களின் விவரம்</u> | <u>அமைய வேண்டிய கட்டுக்கள்</u> | <u>முகவரி</u> |
|---|---|---|
| 1.i) உபயோகிக்கப்பட்ட விடைத்தாட்கள் (Present Candidates – Used OMR Answer Sheets) **(PACKET – I)**<br>2. உபயோகிக்கப்படாத விடைத்தாட்கள் (Unused OMR Answer Sheets) **(PACKET – II)**<br>3. திருத்தப்பட்ட பெயர் பட்டியல் (Corrected Nominal Roll) **(PACKET – III)** | இம்மூன்று கட்டுகளையும் (Packet – I, II, III) ஒன்றன் மேல் ஒன்றாக வைத்து துணிப் பையினால் ஒரே கட்டாக கட்டி அரக்கு முத்திரையிட வேண்டும் . | படிவம் **1**–ன் படி |
| 4. உபயோகிக்கப்படாத வினாத்தாள் புத்தகங்கள் (Unused Question Booklets) | தனிக்கட்டு | சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம் **– Unused Question Booklets தான் உள்ளதா என்பதை அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் சரிபார்த்து பெற்றுக் கொள்ள வேண்டும்.**<br>இந்தக் கட்டினை அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்களிலேயே வைத்துக் கொள்ள வேண்டும். |
| 5. பற்றொப்பச்சீட்டு (Aquitance) | படிவம் **2**–ன்படி | சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம் |

ஒம்/–

**இயக்குநர்**

**<u>தேர்வு அறைக் கண்காணிப்பாளர்களுக்கு முக்கிய அறிவுரைகள்:</u>**

1. தேர்வறைக் கண்காணிப்பாளர்கள் **9.10** மணிக்கு தேர்வறைக்கு செல்ல வேண்டும்.

2. **25.02.2023** (சனிக்கிழமை) அன்று காலை மணி **9.30** முதல் 11.00 வரை பகுதி I – MAT - Paper I மனத்திறன் தேர்வும் (Mental Ability Test ), **முற்பகல் மணி 11.00 முதல் 11.30 வரை இடைவேளை நேரம் (**Break time) முற்பகல் மணி **11.30** முதல் பிற்பகல் 1.00 மணி வரை பகுதி II SAT Paper II படிப்பறிவுத் தேர்வும் (Scholastic Aptitude Test) நடைபெறும்.

3. தேர்வர்களை காலை மணி **9.10**–க்கு தேர்வறைக்குள் அனுமதித்து, தேர்வுக்கூட நுழைவுச்சீட்டினை சரிபார்த்து உரிய இருக்கையில் அமர வைக்க வேண்டும்.

4. தேர்வர்கள் தேர்வறைக்கு வந்தவுடன் தேர்வுகூட நுழைவுச்சீட்டினை சரிபார்த்து அவர்களுக்குண்டான OMR விடைத்தாட்களை வழங்க வேண்டும்

5. காலை மணி **9.20**–க்கு வினாத்தாள் உறை பெறப்பட்டு, **9.25** மணிக்கு அறைக் கண்காணிப்பாளர்களால் வினாத்தாள் உறை பிரிக்கப்பட்டு **9.30** மணிக்கு தேர்வர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

6. ஒவ்வொரு தேர்வு அறைக்கும் **20** மாணவர்கள் மட்டுமே தேர்வு எழுத ஏற்பாடு செய்ய வேண்டும். ஒவ்வொரு தேர்வு அறைக்கும் **20** வினாத்தாள் மற்றும் விடைத்தாள் மட்டுமே வழங்கப்படும். எனவே எக்காரணம் கொண்டும் **20** மாணவர்களுக்கு குறைவாகவோ அல்லது அதற்கு மேலோ ஒரு தேர்வறையில் அமர அனுமதிக்கக்கூடாது. (கடைசி அறை தவிர)

7. **தேர்வர்கள் எக்காரணம் கொண்டும் வினாத்தாள் புத்தகத்தில் (Question Booklet) விடைகளைக் குறிக்க வேண்டாம் என்றும், வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் மட்டுமே (OMR Answer Sheet) விடைகளை நிழற்படுத்த வேண்டும் என்பதனையும் தேர்வர்களுக்கு தேர்வு அறைக் கண்காணிப்பாளர்கள் அறிவுறுத்தல் வேண்டும்.**

8. இத்தேர்விற்கு (OMR ANSWER SHEET) விடைத்தாள் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் தேர்வர்கள் விடைத்தாளில் உள்ள கலங்களைப் பூர்த்தி செய்வது குறித்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளன. அனைத்து தேர்வறைகளிலும் தேர்வர்கள் விடைத்தாட்களைப் பூர்த்தி செய்வது குறித்த அறிவுரைகளைத் தேர்வு அறைக் கண்காணிப்பாளர்கள் மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும். தவிரவும் ஒவ்வொரு விடைத்தாளில் தேர்வர் தேர்விற்கு வருகைபுரிந்த விவரம் (Status of Candidate) Present ‘P’ Or Absent ‘A’ என்ற வட்டத்தை கருப்பு மை பந்து முனை பேனாவினால் அறை கண்காணிப்பாளரால் (Hall Supervisor) நிழற்படுத்தப்பட வேண்டும்.

9. Mental Ability Test (Paper I) **11.00** மணிக்கு முடிந்தவுடன் OMR விடைத்தாட்களை தேர்வர்களிடமிருந்து பெற்று பாதுகாப்பாக வைத்து, Scholastic Attitude Test(Paper II) தேர்வு தொடங்குவதற்கு முன்னர் OMR விடைத்தாட்களை அதே தேர்வருக்கு வழங்க வேண்டும்.

10. (PaperII) தேர்விற்கான வினாத்தாட்களை **11.25** மணிக்கு தேர்வறை கண்காணிப்பாளர்களால் பிரிக்கப்பட்டு **11.30** மணிக்கு தேர்வர்களுக்கு வழங்க வேண்டும்.

11. அறைக் கண்காணிப்பாளர் தேர்வர்களின் பதிவெண் மற்றும் பெயர் ஆகிய கலங்கள் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்த பின் அவர் கையொப்பமிட வேண்டும். தேர்வர்கள் OMR விடைத்தாளில் தாம் எந்த கலத்திற்கான விடை சரி என நினைக்கிறாரோ அந்த கலம் கருப்பு மை பந்து முனை பேனாவினா **மட்டுமே நிழற்படுத்தப்பட வேண்டும் என தேர்வர்களுக்கு தேர்வு அறைக் கண்காணிப்பாளர்கள் அறிவுறுத்தல் வேண்டும்.**

12. பெயர்ப்பட்டியலில் திருத்தத்தினையும் சரிவர மேற்கொள்ளப்பட வேண்டும். திருத்தம் அனைத்தும் சிவப்பு மையினால் மட்டுமே செய்யப்பட வேண்டும். மேலும் வருகை புரிந்த மாணவர்களின் எண்ணிக்கையோடு OMR விடைத்தாட்கள் எண்ணிக்கையினையும் சரிபார்த்து உறுதி செய்து கொள்ள வேண்டும்.

13. தேர்வு முடிந்தவுடன் தேர்வர்கள் வினாத்தாள் புத்தகத்தை (Question Booklet) எடுத்துச் செல்லஅனுமதிக்க வேண்டும்.

14. தேர்வு முடிந்தவுடன் **1.00** மணிக்கு தேர்வர்களிடமிருந்து OMR விடைத்தாட்களை சரிபார்த்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

15. தேர்வினை நல்ல முறையில் நடத்திட வேண்டும்.

ஒம்/–

இயக்குநர்

படிவம் –1

தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்புதவித் தொகைத் திட்டத் தேர்வு (NMMS)

பிப்ரவரி 2023

பெறுநர்:

தேர்வர்களின் எண்ணிக்கை:
வருகை புரிந்தோர் எண்ணிக்கை:
வருகை புரியாதோர் எண்ணிக்கை:

இணை இயக்குநர் (மேல்நிலை)
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை – 600 006

அனுப்புநர்:

தேர்வு மைய எண்:

தேர்வு மைய பெயர்:

தேர்வு மைய முகவரி:

துறை அலுவலர்
கையொப்பம்

தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்
முத்திரை மற்றும் கையொப்பம்